**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**CM00 சிகரம் (Cikaram)**

**இணையவழித் தேர்வு (Online Exam)**

**மாதிரி வினாத்தாள்**

**நேரம்: 30 மணித்துளிகள்** **மதிப்பெண்கள்: 25**

**பகுதி – அ**

**I. கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க.**

**(10x1 = 10)**

**(மலேசியா, க் ச் த் ப், திருத்தக்கதேவர், மூன்று, நாலடியார், ஐ, ஐந்து, கலிவெண்பா, அன்னம், ஒன்பது)**

1. தமிழ்விடு தூது _________________ பா வகையினால் ஆனது.
2. திருக்குறளில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை _________________.
3. சீவக சிந்தாமணியை எழுதியவர் _________________.
4. முதல் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற நாடு ___________.
5. இயல்பு வழக்கு ___________ வகைப்படும்.
6. வேளாண் வேதம் என அழைக்கப்படும் நூல் _____________.
7. ___________ புணர்ச்சியில் மிகும் வல்லின எழுத்துகள்.
8. 'பால் குடித்தான்' என்னும் தொடரில் மறைந்து வந்துள்ள வேற்றுமை உருபு _____
9. கவிஞர் மீராவின் 'விஞ்ஞானி' என்னும் கவிதை அவருடைய ______ என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
10. வழுவமைதி மொத்தம் _______ வகைப்படும்.

## பகுதி – ஆ

**II. சரியான விடையைத் தேர்வு செய்க.** **(5 x 1 = 5)**

1. பிரேசிலின் மிகச் சிறந்த கால் பந்தாட்ட வீரர் யார்?

   அ) மரடோனா ஆ) மெஸ்ஸி

   இ) பீலே ஈ) ரொனால்டோ

2. நெய்தல் நில மக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

   அ) உழவர் ஆ) ஆயர்

   இ) பரதவர் ஈ) எயினர்

3. பொம்மலாட்டத்திற்கான பொம்மைகள் தயாரிக்கப் பயன்படும் மர வகை எது?

   அ) முள் முருங்கை மரம் ஆ) வேப்ப மரம்

   இ) அரச மரம் ஈ) ஆல மரம்

4. 'செஞ்ஞாயிற்றுச் செலவும்' என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

   அ) அகநானூறு ஆ) கலித்தொகை

   இ) புறநானூறு ஈ) நற்றிணை

5. ஆசிரியப்பா எவ்வகை ஓசையைப் பெற்று வரும்?

   அ) துள்ளலோசை ஆ) தூங்கலோசை

   இ) அகவலோசை ஈ) செப்பலோசை

## பகுதி – இ

**III. பொருத்துக.** **(5 x 1 = 5 )**

| | | |
|---|---|---|
| 1. இயற்கை வளங்கள் | – | Stock market |
| 2. வலைப்பூ | – | Patent |
| 3. பங்குச் சந்தை | – | Blog |
| 4. சொற்களஞ்சியம் | – | Natural Resources |
| 5. காப்புரிமை | – | Glossary |

## பகுதி – ஈ

**IV. பின்வரும் வினாக்கள் சரியா? தவறா? எனத் தேர்வு செய்க.** **(5x1 = 5 )**

1. ஆதிச்சநல்லூர் புதைமேட்டை முதலில் உலகறியச் செய்தவர் பெர்லினைச் சேர்ந்த எஃப். ஜகோர். (சரி/தவறு)
2. கட்டியங்காரன் என்பவன் தெருக்கூத்தின் முக்கியக் கதாப்பாத்திரம் ஆவான். (சரி/தவறு)
3. ஏவுகணை நாயகர் என்று அழைக்கப்படுபவர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் ஆவார். (சரி/தவறு)
4. 'ஆசிய ஜோதி' என்னும் நூலை எழுதியவர் நாமக்கல் கவிஞர். (சரி/தவறு)
5. அன்றைய காவிரிப்பூம்பட்டினம் தான் இன்று பூம்புகார் என்று அழைக்கப்படுகிறது. (சரி/தவறு)

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**CM00 சிகரம் (Cikaram)**

**எழுத்துத் தேர்வு (Written Exam)**

**மாதிரி வினாத்தாள்**

**நேரம் : 3.00 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

## பகுதி – அ

## படித்தல் திறன்

**I. கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியினைப் படித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:**

**Read the passage and answer the questions that follow : (5x 1= 5)**

துன்பம் வருகிறபோது மற்றவருக்காக உள்ளம் இரங்கி உடன் பிறந்தவர் போன்று மனிதர் உறவு கொள்வர். உடலில் ஓடும் இரத்தத்திலும் மக்கள் சிந்தும் கண்ணீரிலும் சாதி தெரிவது கிடையாது. எவர் உடம்பிலும் இரத்தம் சிவப்பு நிறமே. எவருடையக் கண்ணீரும் உவர்ப்பே. பிறப்பின் அடிப்படையில் உலகில் யாருக்கும் பெருமை வராது. வாழ்வில் சிறக்க வேண்டுமென்றால் நல்ல செயல்கள் செய்ய வேண்டும். வேறுபாடுகள் இல்லாது சமத்துவம் நிலவ வேண்டும் என்பதைப் புத்தரின் வாயிலாகத் தெளிவுபடுத்துகிறார் கவிமணி.

**வினாக்கள்:**

1. சாதி எதில் தெரிவது கிடையாது?
2. புத்தரின் வாயிலாக எதைத் தெளிவுப்படுத்துகிறார் கவிமணி?
3. உடம்பில் ஓடும் இரத்தத்தின் நிறம் என்ன?
4. கண்ணீரின் சுவை என்ன?
5. எதன் அடிப்படையில் ஒருவருக்குப் பெருமை வராது?

## பகுதி ஆ

## மொழிபெயர்ப்புத் திறன்

**II. கீழ்க்காணும் தமிழ்ப் பத்தியினை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும்:–**
**Translate the following Tamil passage into English: (1x5=5)**

உலக இயற்கை பாதுகாப்பு நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இயற்கையைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நிலைத்தன்மையை ஊக்குவிக்கவும் இந்த நாள் நமக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

**III. கீழ்க்காணும் ஆங்கிலப் பத்தியினைத் தமிழில் மொழிபெயர்க்கவும்:–**
**Translate the following English passage into Tamil: (1x5=5)**

Humanism means helping others at times when they need that help the most; humanity means forgetting your selfish interests at times when others need your help. For being humane, on doesn't have to be a rich person. Just the intent to help others is enough.

## பகுதி – இ
## இலக்கணப்பகுதி

**IV. பின்வரும் பத்தியிலுள்ள வேற்றுமைத்தொகை / வேற்றுமை விரித்தொடர்களை எடுத்தெழுதுக.**
**Find case markers in the following which is hide and open in the passage . (1x5=5)**

மாறன் பள்ளி செல்லும் நேரத்தில் மழை பெய்ததால், குடை எடுத்துச் சென்றான். செல்லும் வழியில் கிடந்த மாங்கொட்டையைச் சாலை ஓரமாக நட்டு வைத்தான். இதனைத் தன் நண்பர்களிடம் கூறினான். நண்பர்கள் மாலை பள்ளி விட்டு வீட்டுக்குச் செல்லும்போது மீதம் உள்ள குடிநீரை மாஞ்செடிக்கு ஊற்றினர். செடி நன்கு வளர்ந்தது.

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**Answer any Five questions (5 x 2= 10)**

1. வெண்பாவின் இலக்கணம் கூறிச் சான்று தருக.
2. சொற்களின் வகைகளை எழுதுக.
3. எழுத்துப்போலியின் வகைகளை எழுதுக.
4. பகுபத உறுப்புக்கள் யாவை?

5. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) 'ஓடுகால்' இதில் வந்துள்ள தொகை

(1) உவமைத்தொகை (2) வேற்றுமைத்தொகை

(3) பண்புத்தொகை (4) வினைத்தொகை

ஆ) கருங்கடல்

(1) பண்புத்தொகை (2) வேற்றுமைத்தொகை

(3) அன்மொழித்தொகை (4) உம்மைத்தொகை

6. மூவிட வழுவினை சான்றுடன் விளக்குக.
7. தனிமொழியினைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – ஈ

## பாடப்பகுதி

**VI. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக:–**

**Answer all questions in a word /Sentence. (5 x 1=5)**

1. பாரதிதாசன் எழுதிய நூல்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
2. தனது படங்கள் எம்மொழியில் பேசுவதாகச் சார்லி சாப்ளின் கூறினார்?
3. ஜெர்மனியில் தோன்றிய மருத்துவ முறை எது?
4. இசைப்பள்ளிகள் அதிகம் உள்ள நாடு எது?
5. ஒளிப்பதிவுக்குப் பின் காட்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்குவதற்கு பெயர் என்ன?

**VII. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக:–**

**Answer any five questions in three lines each. (5 x 2= 10)**

1. பழங்காலத்தில் போர் நிகழும் போது கடைப்பிடிக்கப்பட்ட அறங்கள் யாது?
2. பொருளாதார வளர்ச்சிக்கு எவை தேவை என்பதை அமர்த்தியா சென் குறிப்பிடுகிறார்?
3. சீனிவாச இராமனுஜர் எண் எனக் குறிப்பிடுவது எது? ஏன்?
4. பஃபெட் சிறு வயதில் என்னென்ன வேலைகள் செய்தார்?
5. தமிழர்களின் அயலக வாணிபத்தில் என்னென்ன பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன?
6. ஜெயலட்சுமி தொண்டு நிறுவனத்திடம் வைத்த கோரிக்கை என்ன? அதனை அவர்கள் எவ்வாறு நிறைவேற்றினர்?
7. டாடா குழுமத்தின் தயாரிப்புகள் சிலவற்றை எழுதுக.

**VIII. ஏதேனும் ஒன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக:-**

***Answer any one of the following questions in essay format:*** **(1x 10 = 10)**

1. இயற்கை சமநிலையைப் பேணுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?
2. நெய்தல் நில மக்களின் கடல்சார் வாழ்க்கை குறித்து எழுதுக.
3. திரைக்கலை நுட்பங்களுள் எவையேனும் நான்கினைப் பற்றிக் கூறுக.

**பகுதி – உ**

**செய்யுள் பகுதி**

**IX எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக:-**

**Answer any Five questions .** **(5 x 2= 10)**

1. வெண்பாவின் இலக்கணம் கூறிச் சான்று தருக.
2. வள்ளுவம் காட்டும் மனித நேயம் குறித்து உம்பாடப்பகுதியில் உள்ள ஒரு குறளை எழுதுக.
3. "ஆயுதம் செய்வோம்" என்ற பத்தியில் நாட்டின் வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும் எனப் பாரதி குறிப்பிடுகிறார்?
4. தூது உரைக்கும் பொருள்கள் சிலவற்றைக் கூறுக.
5. பட்டினப்பாலை நூலின் சிறப்பினை எழுதுக.
6. வள்ளுவம் குறித்து அறிவுமதி கூறும் கருத்துகளை எழுதுக.

**பகுதி – ஊ**

**படைபாற்றல் பகுதி**

**X ஏதேனும் ஒன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக:-**

***Write an essay any one of the following questions*** **(1x 10= 10)**

1. உழைப்பின் அருமை குறித்து ஒரு கட்டுரை வரைக.
2. உனக்குப் பிடித்த புத்தகத்தைப் பற்றி உன் நண்பருக்கு ஒரு கடிதம் வரைக.
3. கீழ்க்காணும் படத்தைப் பார்த்து ஐந்து வரிகளுக்குக் குறையாமல் ஒரு கவிதை எழுதுக.



******